# மணலாறில் புலிகள் அதிரடி: 4 படையினர் பலி

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 17 இதழ் 19
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1-3 1994

## ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில், மூன்று இராணுவத்தினரும், ஊர்காவற்படை சிப்பாய் ஒருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 8-55 மணியளவில் பராக்கிரம இராணுவ முகாம் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் மூன்று நிமிடம் மட்டும் இடம் பெற்றது. இத்தாக்குதலின்போது ரி-81

(4ம் பக்கம் பார்க்க)

### பாரிய தாக்குதல் நடத்த இராணுவம் திட்டம்

(கொழும்பு)

மணலாறுப்பகுதியில் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு இராணுவத்தினரும் அதிரடிப் படையினரும் திட்டமிட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் திடீரென ஊடுருவித்தாக்குதலை நடாத்துவதே புதிய தாக்குதல் திட்டமாகும்.

விடுதலைப் புலிகள் மணலாறும் பகுதியில் அண்மையில்

(4-ம் பக்கம் பார்க்க)

● கிழக்கு மாகாணத்தில்

# இரவோடு இரவாக வாக்காளர்

# படை முகாம்களுக்கு கடத்தல்!

## ஐ.தே.க.வுக்கு வாக்களிக்குமாறு நிர்ப்பந்தம்!!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பெருமளவு வாக்காளர் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டு, இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி அவர்களை நிர்ப்பந்திக்கும் விதமாகவே அவர்கள் இவ்வாறு கடத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகப் பல அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் இராணுவத்தினர் வாக்காளர்களுக்கு கடும் நெருக்குதல் கொடுத்து வருவதாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மூதூர் பகுதியில் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட இருந்த பெருமளவு வாக்காளர் அட்டைகள் இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் இன்று இந்த இராணுவ முகாம்களுக்கு வந்து தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளனர் என்றும் ஈ. பி. ஆர். எல். எவ். தெரிவித்துள்ளது.

## 317 இடங்களுக்கு இன்று 2,000 வேட்பாளர் போட்டி!

(கொழும்பு)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கும், வவுனியா நகரசபைக்குமான மொத்தம் 317 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், இன்று நடைபெறுகின்றது. இரண்டாயிரம் வேட்பாளர்கள் இதில் போட்டியிடுகின்றனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கென சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட அரச அதிகாரிகள், அவ்வப் பிரதேசங்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் 39 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், வவுனியா நகரசபைக்கும் தேர்தல் நடைபெறுகின்றது.

மொத்தம் 180 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

### அரச வெற்றிடங்களை 3 மாதங்களுக்குள் நிரப்ப முடிவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல வெற்றிடங்களையும் அடுத்த மூன்று மாதங்களுக்குள் நிரப்ப அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த நியமனங்களின் போது இதுவரை பின்பற்றப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை தளர்த்தப்பட்டு வெட்டுப்புள்ளியையும் குறைப்ப

(4-ம்பக்கம் பார்க்க)

### திருமதி அத்துலத் முதலி அரசியலில் ஈடுபட ஆர்வம்?

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியின்கீழ் தென்மாகாண சபை தேர்தலில் போட்டியிடவுள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்க தாம் ஆலோசித்து வருவதாக திருமதி ஸ்ரீமணி அத்துலத் முதலி

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழர் மீது தாக்கு

(மட்டக்களப்பு)

இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பு மற்றும் ஏனைய பகுதிகளில் இராணுவத்தினரால் தமிழ்ப் பொது மக்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் மிகவும் அதிகரித்துக் காணப்படு

(4ம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் பாதுகாப்புக்கு 15 ஆயிரம் படையினர்

(கொழும்பு)

கிழக்கில் இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக 15 ஆயிரம் படையினர் மேலதிகமாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே பெருமளவு படையினரும் பொலிஸாரும் உள்ள போதிலும் மேலதிகமாக இந்த 15 ஆயிரம்பேர் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐயாயிரம் பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

### 7 கட்சிகள் போட்டி

(கொழும்பு)

இன்று நடைபெறும் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி உட்பட 7 கட்சிகள் போட்டியிடுகின்றன. -வி-இ

● நீராவியடியில்

## ஷெல் வீழ்ந்து வீடு சேதம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 6-30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின்போது நீராவியடிப் பகுதியில் வீடொன்றின் மீது ஷெல் விழுந்து வெடித்ததில் வீடு சேதமடைந்தது. வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

பிறவுண் வீதியிலுள்ள ஞ. சுப்பிரமணியம் என்பவரது வீட்டின் மேலேயே ஷெல் விழுந்து வெடித்தது. -இ

## இனப்பிரச்னைக்கான தீர்வு என்னிடம் உள்ளது - சந்திரிகா

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கான தீர்வு என்னிடம் உள்ளது. பிரேமதாசா, டி. பி. விஜேதுங்கா ஆகியோரைப் போல நான் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள், நிதியுதவி மற்றும் சீமெந்து போன்றவற்றை விநியோகிக்கவில்லை. அதுடன் அவர்களுக்கு பால் வார்க்கவும் நான் தயாராக இல்லை.

எனினும் வடபகுதியிலுள்ள தமிழ் மக்கள் மீது நான் நம்பிக்கை வைத்துள்ளேன்.

மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணா

(4-ம் பக்கம் பார்க்க)

# கடல் தடைச் சட்டம் நீக்கம் கொழும்பில் குழப்ப நிலை

(கொழும்பு)

வடபகுதியில் கடல் தடைச் சட்டம் நீக்கப்படுவது தொடர்பாக வெளிவந்த செய்தியினால் கொழும்பில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக பி. பி. சி நேற்று அறிவித்தது.

இந்த கடல் தடைச்சட்டம் நீக்கம் பற்றி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இன்னும் எந்த ஒரு உத்தரவும் பிறப்பிக்கவில்லை. இந்தமுடிவு பற்றி தமக்கு ஏதும் தெரியாது என்று கடற்படை அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

இம் மாதம் வடபகுதி கடல் தடைச் சட்டம் நீக்கப்பட்டுவிடும் என்று புனர்வாழ்வு அமைச்சும், இராணுவமும் கூறுகின்றது. இந்த தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடந்த ஐந்து வருடங்களாக அரசு நிவாரணத்துக்காக பெருந்தொகையான பணத்தை செலவிட்டது அரசுக்கு நிதிவிடயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இந்த சட்டத்தினால் இந்திய மீனவர்களும் பெரும் பாதிப்படைவதாக, இந்திய அரசு இலங்கைக்கு அரசியல் ரீதியில் பெரும் நெருக்கடியை கொடுத்து வருவதினாலேயே இந்த கடல் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு அரசு முனைகின்றது. ஆனால் இதுபற்றி திட்டவட்டமான ஒரு முடிவும் தெரியாததினால் வடபகுதி மீனவர்கள் செய்வதறியாது பெரும் குழப்பத்தில் இருக்கின்றார்கள்.

இந்த சட்டம் நீக்கப்பட்டாலும் வடபகுதி மீனவர்கள் கடற்படையினரின் ரோந்து மேற்பார்வையில் தான் ஆபத்துக்கள் பல நிறைந்த கடல் பகுதிக்குள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டும் என்று பி. பி. சி. மேலும் தெரிவித்தது. (வி - இ)

---

### திருமதி அத்துலத்முதலி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் அத்துலத் முதலி கொலை செய்யப்பட்டமை தொடர்பான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருந்த திருமதி அத்துலத்முதலி இப்போது இவ்விதம் தெரிவித்திருப்பது அவர் அரசியலில் பிரவேசிக்க முடிவு செய்திருப்பதாக தெரியவருகிறது என அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ)

### இனப்பிரச்னைக்கான
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென்மாகாணத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறியதாவது!

ஐந்து குடும்பங்களில் ஒரு குடும்பமாவது இன்று அரச நெருக்குதல்களுக்கு உள்ளாகின்றது.

இன்று 24 லட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பில்லாது உள்ளனர்.

வேலைவாய்ப்பில்லாதவர்களுள் பட்டதாரிகள், டிப்ளோமா பட்டதாரிகள், மற்றும் பல்வேறு துறைகளில் விசேஷ பயிற்சி பெற்றோரும் அடங்குவர்.

42 லட்சம் பிள்ளைகள் இன்று பாடசாலை செல்கின்றனர். 60 லட்சத்து 70 ஆயிரம் பேர் கல்வியைத் தொடர முடியாது உள்ளனர்.

இவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடமோ ஐ. தே. க அரசிடமோ திட்டங்கள் எதுவும் இல்லை.

கடந்த பதினேழு ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி அரசின் கீழ் வேலைவாய்ப்புப் பெற்றவர்களைவிட அதிகமானவர்கள் தமது வேலைவாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

அத்துடன் தென்பகுதியில் அநேக குடும்பங்களில் ஒரு பிள்ளையாவது காணாமல் போயுள்ளது என்றார். (இ)

### அரச வெற்றிடங்களை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு அரசு தீர்மானித்துள்ளது.

வெற்றிடங்களை நிரப்பும் போது இங்கு வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரச திணைக்களங்களுக்கு மட்டுமன்றி கூட்டுத்தாபன சபைகளுக்கும் உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், திட்டமிடல் அதிகாரிகள் எழுது வினைஞர்கள், கிராம அதிகாரிகள் வைத்திய அதிகாரிகள் ஆசிரியர்கள் ஆகியோர் இவ்வாறு நியமிக்கப்படவுள்ளனர். (உ - இ)

### 317 இடங்களுக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளன. பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த இரண்டாயிரம் வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

7 லட்சத்து 62 ஆயிரத்து 800 க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

தேர்தலுக்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெரேரா தெரிவித்துள்ளார்.

சுமார் ஐயாயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர் எனவும் 10 ஆயிரம் இராணுவத்தினர் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காலை 7-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை வாக்களிப்பு நடைபெறும். க-இ


**யாழ். மறை மாவட்ட**

**மேய்ப்புப்பணி**

**மகாநாடு**

8-3-1994 - 14-3-1994

எதிர்பாருங்கள்

விளக்கக் கட்டுரைகள்

சிறப்பிதழ் - 8-3-1994

பொது மக்கள் தொடர்புக்குழு

மேய்ப்புப்பணி மகாநாடு

(கி-840)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B

---

## கிளாலிக் கடலில்
# பொருள்கள் ஏற்றிவந்த படகு மூழ்கடிப்பு

(சாவகச்சேரி)

கிளாலி கடல் பரப்பில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற விமானத்தாக்குதலின் போது பொருள்கள் ஏற்றி வந்த படகு ஒன்று பொருட்களுடன் நீரில் மூழ்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மூன்றுக்கு மேற்பட்ட படகுகள் பொருட்களுடன் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

### கிழக்கில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் 10 ஆயிரம் பேர் ராணுவத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இ-125-170

# கனேடியர் விபரங்களை அரசு கோரியுள்ளது

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக அமைச்சர் தொண்டமானுடன் பேச்சுவார்த்தை நடாத்த விருப்பம் தெரிவித்துள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கனடாவிலுள்ள முக்கிய தமிழ்பிரமுகர்களின் விபரங்களை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது! இது தொடர்பாக கனடாவிலுள்ள இலங்கை தூதரக தொடர்புத்துறை அதிகாரியும் கனேடிய சட்ட நிபுணரும் இலங்கை அகதிகள் விடயத்தில் அக்கறை கொண்டவருமான மார்ச் வோரிக்கர் என்பவரை கடித மூலம் கேட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

மேலும் இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் இருவரும் கனடாவின் முக்கிய பிரமுகர் இருவரும் அமைச்சர் தொண்டமானின் உதவியை நாடியிருந்தது தெரிந்ததே. உ-இ

---

# பேராதனைப் பல்கலைபோல்
## ஏனைய பல்கலைகளும் மூடப்படும்?

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது போல ஏனைய பல்கலைக்கழகங்களும் மூடப்படவேண்டிய ஒரு சூழ்நிலை இப்போது உருவாகியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களுக்கு முன் பேராதனைப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக அதிகாரிகளால் மூடப்பட்ட போதும், அங்குள்ள மாணவர்கள் எவரும் இதுவரை பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறவில்லை.

பேராதனை பல்கலைக்கழகத்தின் விவகாரம் இப்போது ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் பரவ ஆரம்பித்துள்ளது.

களனிப்பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக சத்தியாக்கிரகமும் ஒன்றை நடாத்தினர்.

பேராதனைப் பல்கலைக்கழகம் உடன் திறக்கப்பட வேண்டுமெனவும் விடுதிவசதியில்லாத மாணவர்களுக்கு விடுதிவசதி செய்து கொடுக்க வேண்டுமெனவும் அவர்கள் அரசை வற்புறுத்தினர். (இ)

# உபவேந்தர் வீட்டை மாணவர் முற்றுகை

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக உபவேந்தரின் வீட்டில் 800 மாணவர்களும், பல்கலைக்கழகத்தைச் சுற்றி 1500 மாணவர்களும் முற்றுகையிட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

உபவேந்தரின் வீட்டில் மின்சாரம், தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. எந்த வேளையிலும் நீர் விநியோகமும் நிறுத்தப்படலாம் எனவும் மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் 15 பொலிஸ் ஜீப் வாகனங்கள் உபவேந்தர் வீட்டையும் 15 பஸ் வண்டிகள் பேராதனைப் பல்கலைக்கழக விஜேவர்த்தனமண்டபத்தைச்சுற்றியும் நிறுத்தப்பட்டன. எனினும் இந்த வாகனங்கள் பின்னர் அப்புறப்படுத்தப்பட்டன.

இதேவேளை பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலைக்குள் திடீரென புகுந்த பொலிஸார் அங்குள்ள உணவு முழுவதையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் மாணவர் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

மிகவும் உக்கிர நிலை அடைந்துள்ள இவ்விவகாரம் குறித்து பேராதனை வேந்தருடன் விரைவாக தொடர்புகொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (இ)

### பாரிய தாக்குதல்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைக்கு பதிலடியாகவே புதிய தாக்குதல் அமையும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

### தமிழர் மீது
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5-00 மணியளவில் ஈச்சிலம்பற்றை, 49ம் கட்டை, வெருகல், கதிரவெளி முகாம்களிலிருந்து வெளியேறிய படையினர், பெரியசோலை, வெருகல், முகத்துவாரம், முத்துச்சேனை, வவுணதீவுசேனை டம் ஆகிய பகுதிகளில் தேடுதல் மேற்கொண்டதில் ஐந்து பொதுமக்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். க-இ

### மணலாறில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரகத் துப்பாக்கிகள் 03, அமெரிக்க ரகத் துப்பாக்கி ரவைக் கூடுகள்-08, நடுத்தர ரவைகள்-406, சப்பாத்துக்கள்-02 சோடி, தலைக்கவசங்கள்-02, பி. பி. கிளைமோர்-01, வயர் றோல்-01, வானொலிப் பெட்டி-01, இடுப்புப் பட்டிகள்-02 ஆகியன தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலின்போது புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. உ-இ

---

## பொஸ்னியாவில்
# நான்கு யுத்த விமானங்களை அமெரிக்கா சுட்டுவீழ்த்தியது

(சரயூவோ)

பொஸ்னிய வான் பரப்பில் பறந்த நான்கு யுத்த விமானங்களை அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தியிருப்பதாக நேட்டோ அறிவித்துள்ளது.

மேற்படி நான்கு விமானங்களும் சேர்பியர்களுக்கு சொந்தமானவையென்றும் பொஸ்னியா மீது விமானங்கள் பறக்கக்கூடாது என்ற தடை உத்தரவை மீறியதாலேயே இவ்விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் நேட்டோ அமைப்பு தெரிவித்துள்ளது. உ-இ

# நரேமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

'நரேமா' கப்பல் மூலம் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்குச் செல்வதற்காக பதிவு செய்த பிரயாணிகள் இன்று காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறையில் சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இன்றையதினம் பருத்தித்துறையிலிருந்து "சோமாலி" கப்பல் "நரேமா" கப்பலில் செல்வதற்கான பிரயாணிகளை முற்பகல் 11-30 மணிக்கு ஏற்றிச் செல்வதற்கு ஏற்பாடாகியுள்ளது என்பதை யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (162-இ)

# ஒய்வூதிய கொடுப்பனவு

(அரியாலை)

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்று 1ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் வழக்கம் பனையிலுள்ள தற்காலிக கிராமிய வங்கியில் வழங்கப்படுமெனத் தெரிவருகிறது. -59